# திராவிடன்

ஆசிரியர்: என். வி. நடராசன்.

# மாநகராட்சியின் லாரி ஒப்பந்தம் சட்ட விரோதமானதோ- சரியற்றதோ - அல்ல!

## கம்யூனிஸ்ட் உறுப்பினர் 'ரிட்' மனு மீது சென்னை உயர்நீதி மன்றம் அளித்த தீர்ப்பு!

கீவ்ராஜ் கம்பெனியாரிடம், சென்னை நகரசுத்திப் பணிகளுக்காக பெட்போர்டு லாரிகள் வாங்கும் வகையில் செய்துக் கொண்ட ஒப்பந்தம் "சட்ட விரோதமானதோ, சரியற்றதோ அல்ல" என்று உயர் நீதி மன்றம் 4-3-64 அன்று தீர்ப்பளித்துள்ளது.

சென்னை மாநகராட்சியின் பொதுவுடமை உறுப்பினரான கண்ணன் என்பவர் தாக்கல் செய்த தடை (ரிட்) மனுவின் மீது தீர்ப்பளிக்கையிலேயே உதிர்நீதி மன்ற நீதிபதி திரு. வீராசாமி அவ்வாறு கூறியுள்ளார்.

வழக்கின் பிரதிவாதிகளான மாநகராட்சிக்காகவும், அதன் ஆணையாளருக்காகவும் வழக்கறிஞர் திரு. செங்கல்வராயன் எம்.பி வாதாடினர்.

பொதுவுடமைக் கவுன்சிலருக்காகத் தோழர் மோகன் குமாரமங்கலம் வாதாடினர்.

வழக்கின் விவரம் வருமாறு:

சென்னை நகரசுத்திப் பணிகளுக்காக 44 லாரிகளை வாங்குவதென்று மாநகராட்சி முடிவு எடுத்தது.

அதன் பேரில், அவற்றை கீவ்ராஜ் கம்பெனியாரிடம் வாங்குவதற்கான ஒப்பந்தம் மாநகராட்சி ஆணையருக்கும் அம்மோட்டார் கம்பெனியாருக்குமிடையே சென்ற ஆண்டு ஆகஸ்டு 30-ம் நாள் நடந்தது. அதன் மறுநாள் லாரிகள் பெறப்பட்டன. முன் பணமாக ரூ. இரண்டு லட்சம் தரப்பட்டது.

44 லாரிகள் போக, சில இயந்திரப் பெருக்கு கருவிகளும் வாங்கப்பட்டன. லாரி வகையில் பாக்கித் தொகையும், இயந்திரக் கருவிகளின் பெறுமானமும் சேர்த்து மொத்தம் ரூபாய் பதினாறு லட்சம் கீவ்ராஜ் கம்பெனிக்குக் குக் கொடுக்கப்பட வேண்டியிருந்தது.

இத்தொகையைச் செலுத்தி விடுவதற்கான அனுமதி கடந்த பிப்ரவரித் திங்கள் 5-ம் நாள் நடந்த மாநகராட்சிக் கூட்டத்தில் வழங்கப்பட்டது.

அரசாங்கத்திடம் ஏற்கனவே வாங்கிய கடன் தொகைகளில் ரூபாய் 6 லட்சம் செலவழிக்கப்படாமல் உள்ளது. அதை உடனடியாக லாரிக் கம்பெனிக்கு வழங்கலாம்" என்றும் அக்கூட்டத்தில் அனுமதி அளிக்கப்பட்டது.

இந்த முடிவை எதிர்த்துத்தான் பொதுவுடமைக் கவுன்சிலர் உயர் நீதி மன்றத்தில் தடை மனு தாக்கல் செய்தார்.

"லாரிக் கொள் முதல் பற்றி சென்னை மாநகராட்சி 1961-ல் சில கொள்கைகளை வகுத்திருக்கிறது. தற்போதைய ஒப்பந்தம் அக்கொள்கைகளை மீறிவிட்டது. எனவே, லாரிக் கம்பெனிக்குப் பணம் கொடுத்துவிடுவது என்ற முடிவுக்கு தடை விதித்து, சட்ட விரோதம் என்று அறிவிக்க வேண்டுகிறேன்." என்பதாகத் தடை மனுவிற்காக வாதாடப்பட்டது.

நகராட்சிக்காக புதிய சட்டப்படி மத்தியக்குழு அமைக்கப்பட்டது. அதன் பரிந்துரையை, மாநகராட்சி மன்றம் ஏற்றுக் கொண்ட பின்னரே ஆணையாளர் ஒப்பந்தத்தை முறைப்படி அமுல் படுத்தியிருக்கிறார். எனவே இதில் முறை தவறான சட்ட விரோதமான போக்கு இல்லை" என்பதாகத் திரு. செங்கல்வராயன் வாதாடினர்.

இருதரப்பு வாதத்திற்குப் பின், பொதுவுடமை மனுவைத் தள்ளுபடி செய்து நீதிபதி தீர்ப்பளித்தார்.

அவர் தம் தீர்ப்பில் கூறியுள்ளதாவது: நிலைக் குழுக்களுக்குப் பதிலாக மத்தியக் குழுவும் கொள் முதல் குழுவும் கடமையாற்றுகின்றன. அவற்றின் பரிந்துரைகளை சட்டவிதிகளுக்குட்பட்டு ஆணையாளர் அமுல்படுத்தினர்.

இன்ன லாரிகளைத்தான் வாங்க வேண்டும் என்று அமுலில் இருந்துவந்த கொள்கையை ரத்து செய்வதாக 1963 ஜூலையில் மத்தியக் குழுவின் சிபார்சுப்படி மாநகராட்சி மன்றம் தீர்ப்பளித்தது.

அதற்கேற்பவே கொள்முதல் குழு நடந்திருக்கிறது. ஆணையாளரும் கொள்முதல் செய்திருக்கிறார். பின்னர் இதை மாநகராட்சி மன்றமும் ஏற்றுக்கொண்டுள்ளது.

இந்த நிலையில், இந்த இனம் சட்ட விரோதமானதோ—சரியற்றதோ (தவறானதோ) இல்லை"

அவர் மேலும் கூறியதாவது:

வேறு லாரிகள் கிடைக்கவில்லை எனவே பெட்போர்டு லாரிகளை வாங்க மத்தியக்குழு பரிந்துரைத்தது.

அதனை மாநகராட்சி மன்றமும் அங்கீகரித்தது. ஆணையாளர் அம்மன்றத்தின் உத்தரவை நிறைவேற்றுபவர். அவர் [illegible] செய்திருக்கிறார்.

○

மாலை 17 : விலை 16 காசு 7—3—64 வார இதழ் : மலர் 31

# தலையங்கம்

மாலை 17. 7—3—64 மலர். 31

# பாகிஸ்தான் அட்டூழியம்!

——(0)——

நாட்டுக்கு நாடு ஏற்படும் போரையும் பூசலையும் கணிசமாகக் குறைத்து வழி காண்பதில் ஐ. நா. சபை பெற்றுள்ள பெருமை மகத்தானதாகும். மக்களை அழிவிலிருந்து காப்பதற்கு இதுவரைச் சரித்திரத்தில் எந்தச் சக்தியும் செய்து காட்டாத பணிகளை இன்றைய ஐ. நா. சபை வெற்றிகரமாக நிறைவேற்றுகிறது என்பதில் ஐயப்படுபவர் யாரும் இருக்க முடியாது. ஆனால் ஆங்காங்கு—அந்தந்த அரசாங்கத்தை மனமார ஏற்றுத் தூய்மையாக மதித்து—அமைதியான வாழ்க்கை நடத்தி வரும் மைனாரிட்டி சமுதாயங்களை அந்தந்த இடத்தின் மெஜாரிட்டி சமுதாயத்தினர் வெறித்தனமாக—மனிதத் தன்மைக்கு மாறாக—நடத்த முற்படும் போது, அந்தந்த இடத்தில் துணிச்சலாகத் தலையிட்டு நியாயம் காணும் அவசிய அவசரமான அதிகாரம் ஐ. நா. சபைக்கு உடனடியாகக் கிடைத்தாக வேண்டுவது இன்றைய நிலைமைக்கு எவ்வளவு அத்தியாவசியம் என்பதை, அனைவரும் தீவிரமாகச் சிந்திக்க வேண்டிய காலம் வந்துவிட்டது.

சைப்ரஸ் நாட்டில் அண்மையில் குமுறி வெடித்த மெஜாரிடி—மைனாரிடி பிரச்சினையும் அதன் காரணமாக இரு தரப்பிலும் ஏற்பட்ட அழிவையும் கண்ட மனித குலம், அரசாங்கத்துக்கு அரசாங்கம் மோதிக் கொள்வதைத் தடுப்பதைக் காட்டிலும், அண்டையிலும் அடுத்தும் வாழ்கின்ற மக்களுக்குள் ஏற்படுத்த வேண்டிய சமாதானப்பணி மிகப் பெரிய மலையாக எதிர் நிற்பதை ஐ. நா. சபை உணரவேண்டும் என்பதை எதிர்பார்க்கிறது.

பெரும்பான்மையாக இருக்கும் சக்தி சிறுபான்மையை அனுசரித்தும் அன்பு செலுத்தியும் நடத்திக்கொண்டு போகும் நேரத்தில்தான், ஜனநாயகத்தின் உயிர்மூச்சு அமைந்திருக்கிறது. ஒரே குலம், ஒரே மதம், ஒரே பழக்க வழக்கம், ஒரே மொழி என்ற வெறி கொண்டுவிட்ட எந்த இடத்திலும் ஜனநாயகமோ, சகோதர பாவமோ, நாகரிக அரசியலோ, அமைதியான வாழ்வோ காண முடியாது என்பதற்கு ஆசியாவில் பரவலாக இருக்கும் எதேச்சாதிகார வெறி பிடித்த நாடுகளில் இன்றைக்குக் காண்கிறோம். இலங்கைச் சிறுபான்மையினர் நடத்தப்படும் கொடுமை பழங்கால பாரசிக ஏகாதிபத்தியம் நடத்தியதைக் காட்டிலும் கொடுமையாக இருக்கிறது. பர்மாவின் சிறுபான்மையினருக்கு இழைக்கப்படும் அநீதி, பௌத்த தர்மத்தின் ஆணி வேரையே அசைத்துவிடக் கூடியதாக அமைந்திருப்பதைக் காண்கிறோம். அனைத்துக்கும் மேலாக இன்றைய பாகிஸ்தான் ஆட்சியின் அலங்கோலமான நடத்தைகள் இஸ்லாமிய நெறிகளுக்கே முரண்பாட்டைக் கற்பிக்கின்றன. கொடுமையும் தப்புப் பிரச்சாரமும் இழை பின்னியோடும் இன்றைய கிழக்கத்திய அரசாங்கங்கள் பலவற்றிலும், தன்னைத் தலைசிறந்ததாகக் காட்டிக்கொள்ள வேண்டும் என்ற வெறி பாகிஸ்தான் ஆட்சிக்கு ஏற்பட்டு விட்டிருக்கிறது.

பாகிஸ்தானத்திலுள்ள சிறுபான்மை சமுதாய மக்களை பூண்டோடு அழித்துவிடும் அல்லது கூண்டோடுத் துரத்திவிடும் தத்துவமே அயூப்கான் அரசாங்கத்தின் அடிப்படைத் தத்துவமாக ஆகி விட்டிருப்பதாக நமக்குத் தெரிகிறது. எளியோரை—ஏதுமில்லாது நிர்க்கதியாக நிற்கும் மக்களைப் பேணுவது இஸ்லாமிய தர்மங்களின் தலையாயது. இதற்கு நேர்மாறானவைகளையே பாகிஸ்தானத்தில் இன்று காணும் யாரும் வருந்தாமலிருக்க முடியாது. கடந்த ஒரு கிழமை காலமாக அந்த நாட்டில் சிறுபான்மைச் சமூகத்தினர் அனுபவிக்கும் கொடுமைகளையும், அதன் காரணமாக இந்திய அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ள பொறுப்புகளையும் பாராளுமன்றத்தில் கதைகதையாகப் படித்துச் சொல்லாத நாளோ, எடுத்துக்கூறாத நேரமோ இல்லை. நடக்கும் இன்னல்கள் தாங்கமாட்டாமல், அங்கிருந்து ஓடிவரும் மக்கள் மீது—பெண்கள் குழந்தைகள் என்பதைக் கூட பார்க்காமல்—இராணுவ வெறியர்கள் சுட்டுப் பொசுக்குகிறார்கள் என்பதை இதயம் படைத்த எவர் கேட்பினும் கண்ணீர் விடாமல் இருக்க முடியாது. "கள்ளத்தோணி" என்ற குற்றஞ் சாட்டி அடித்துக் கொன்றுத் தமிழர்களைக் கடலில் பிணமாக மிதக்கவிட்ட இலங்கை அரசாங்கத்தின் வெறியைக் கண்டித்தது போலவே, பாகிஸ்தான் அரசாங்கத்தின் அட்டூழியங்களையும் கழகம் கண்டிக்கிறது. மதம் எதுவாக இருப்பினும், மனித உயிர்களுக்குக் கொடுக்கவேண்டிய சராசரி மதிப்பையும் மரியாதையையும் காரணமாகக் காட்டியே ஜின்னா போன்ற பெருமக்கள் ஆங்கில அரசாங்கத்துடன் உறுதியாகப் போராடினார்கள். இனம் மதம் பாராமல் பாகிஸ்தானில் வாழும் சிறுபான்மையினருக்கு உரிய கவுரவமும் பாதுகாப்பும் கிடைக்கும் என்றே லியாகத் அலிகான் போன்ற அரசியல் பெருமக்கள் இந்தியாவிடம் உறுதியாகத் தெரிவித்து ஒப்பந்தம் செய்துகொண்டார்கள். இவ்வளவும் அயூப்கான் ஆட்சியில் தலைகீழாக மாறிவிட்டதைக் கண்டு, இந்தத் துணைக் கண்டம் வியப்படைவதைப் போலவே, இந்தத் தமிழகமும் வியப்பும் வருத்தமும் கொள்கிறது.

கட்சி வேற்றுமையைப் பாராமல் இந்தப் பிரச்சினையை இந்திய மக்கள் அனைவரும் தேசியப் பிரச்சினையாகப் பாவிக்கவேண்டும் என்றும், பிரச்சினை முழுவதையும் மனிதத் தன்மை ஏற்பட்டுள்ள நெருக்கடியாகப் பாவிக்கவேண்டுமென்றும், இத்தகைய கொடுமையை எதிர்த்து தடுப்பதற்கான உலக மனசாட்சியைத் திரட்டப் பாடுபடவேண்டுமென்றும், பாகிஸ்தான் சிறுபான்மையினர் பிரச்சினைபற்றிப் பாராளுமன்றத்தில் பேசப்பட்ட நேரங்களில் கருத்தறிவிக்கப்பட்டிருக்கிறது. இந்தக் கருத்துக்கள் உண்மையிலேயே வரவேற்கத்தக்கவை.

பாகிஸ்தான் சிறுபான்மையினர் பிரச்சினை மட்டுமல்ல. உலகிலுள்ள, சிறுபான்மை சமூகத்தைக் கொடுமைப்படுத்தி பெரும்பான்மையாக இருக்கும் சந்தர்ப்பம் கிடைத்துவிட்ட சக்திகள் புரியும் கோரதாண்டவத்தைத் தடுத்து நிறுத்தவல்ல உறுதியான ஒரு திட்டம் உருப்படியாகத் தீட்டப்படுதல் வேண்டும்.

பாகிஸ்தான் சிறுபான்மையினர் பிரச்சினை, பாராளுமன்றத்தில் வெளியிட்ட கருத்துக்கேற்ப, தேசியப் பிரச்சினையாகவும், மனித குலப் பிரச்சினையாகவும், உலகப் பிரச்சினையாகவும் எடுத்துக் கொள்ள வேண்டிய ஒன்றாகும். அதை விடுத்து, அதனை ஒரு கட்சிப் பிரச்சினையாகவே எந்தப் பிரச்சினையும் இல்லாத கற்றுக்குட்டி அரசியல் வாதிகள் மேலால் தூக்கிப் போட்டுக்கொண்டு பேசிப் பழகிக் கொண்டிருப்பது, பிரச்சினைக்குப் பரிகாரம் காண்பதைக் காட்டிலும் பாதகத்தைச் சேர்ப்பதில்தான் முடியும்.

இது பேசத் தெரிந்தவர்கள் பேசவேண்டிய பிரச்சினை; பொறுமையுள்ள மனிதர்கள் புகுந்து ஆராயவேண்டிய பிரச்சினை; நிதான புத்தியுடன் எப்போதும் நேர்மையாகச் சிந்திக்கத் தெரிந்தவர்கள் எடுத்துரைக்க வேண்டிய பிரச்சினை. கை தட்டுவதற்கு ஆட்களை அமர்த்திக்கொண்டு கரகோஷத்திற்காக இந்தப் பிரச்சினையைப் பழக்கமில்லாதவர்கள் எடுத்துரைக்க முயல்வதை நமது நாட்டில் உடனடியாகத் தடுத்து நிறுத்தவேண்டும்.

"பாகிஸ்தானத்தில் சிறுபான்மையினருக்கு நேரும் தீங்குகளுக்குப் பதிலடி கொடுக்கும் நோக்குடன் இந்தியாவில் எந்த முஸ்லிம் குடிமகனும் பாதுகாப்பற்றுப் போவதைப் பார்த்துக் கொண்டிருக்க முடியாது." என்று, நமது உள்துறை அமைச்சர் நந்தா அவர்கள் திட்டவட்டமாகத் தெரிவிப்பது ஆழ்ந்த அரசியல் விவேகம் படைத்த கருத்தாகும். பாகிஸ்தானின் கொடுமைகளை திரை கிழித்து அகில உலகுக்கும் காட்டவும், அதனை எதிர்த்துக் குரல் கொடுக்குமாறு அகில உலக மக்களையும் திரட்டவும் நாம் உண்மையாகவே முயற்சி எடுத்துக் கொள்கிறோம் என்றால், இங்குள்ள சிறுபான்மை மக்கள் பிறர் புகழும் வகையில் பாதுகாப்புடன் வாழ வேண்டும். பழிக்குப் பழி என்ற வகையில் ஒரு பக்கத்தில் பேசிக் கிடப்போரை அனுமதித்துக் கொண்டு, நந்தா போன்றவர்கள் தெரிவிக்கும் நல்ல கொள்கைகளை இந்தப் பிரச்சினையைப் பொறுத்த மட்டில் அமுல் நடத்த முடியாது. ஏகாதிபத்திய சக்திகளை எப்படிச் சமாளிப்பது என்று இந்தத் துணைக்கண்டம் தயாராகிக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில், வகுப்புப் பூசலை வளர்க்க நினைப்போர் முளையிலேயே கிள்ளி எறியப்பட வேண்டியவர்களாவர்.

பாகிஸ்தானத்திலிருந்து புகல் தேடி வரும் அகதிகளை புனர்வாழ்வளித்துக் காப்பாற்றுவதன்கூடவே அந்த அகதிகளைக் காட்டி இங்குள்ள சிறுபான்மையினரை "முடி சாய்ப்பேன்" "ஓடச் செய்வேன்" என்று வீராப்புப் பேசுவோரை அடக்குவதையும் அரசாங்கம் முக்கிய கடமையாகக் கொள்ளல் வேண்டும்.

---

## வாசகர்களுக்கும் ஏஜெண்டுத்தோழர்களுக்கும் வேண்டுகோள்

நம் கழகத்தின் இடைவிடாத முக்கிய பணிகளில் ஆசிரியர் என். வி. என். அவர்கள் பெரிதும் ஈடுபட்டிருப்பது அனைவரும் அறிந்ததே. அதன் காரணமாக கடந்த இரண்டு திங்களாக வாரந்தோறும் குறித்த காலத்தில் திராவிடன் வெளியிட முடியாத நிலை ஏற்பட்டமைக்கு பொருத்தருள வேண்டுவதுடன் விரைவில் எப்போதும் போல் குறித்த நேரத்தில் வெளிவரும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

**இந்த நெருக்கடியான நேரத்தில் ஏஜெண்டுத் தோழர்கள் ஒத்துழைப்பு தரும் வகையில் நிலுவைத் தொகையை உடன் தவறாது அனுப்பி வைக்க வேண்டுகிறோம்.**

# வேதனையை மறப்போம்! வேலையைத் தொடருவோம்!

[கோவை க. இரத்தினம்]

சென்னைத் தெருக்களிலே எவராவது முக்காடு போட்டுக் கொண்டு போனால் யாரோ என்று எண்ணி விடாதீர்கள். அவர் முன்னாள் 'கனம்' காமராசராக—ந்நாள் அகில இந்திய காங்கிஸ் தலைவராக இருக்கலாம்!

அல்லது எட்டப்பன் வாரிசான குட்டிக் காங்கிரசுத் தலைவராகவும் இருக்கலாம்!

அப்படி முக்காடு போட்டு முகத்தை மறைத்துக் கொண்டு செல்லும் அந்தப் பிறவி, ஒரு இரண்டாந்தர அரசியல்வாதியாகத்தான் இருக்கவேண்டும் என்றில்லை. பெங்களூர் கோப்பைகளில் குடியிருந்து கொண்டு, கோல மயில்களின் மடியில் புரண்டுத் திரியும் ஒரு சினிமாக் கவிஞனாக கூட இருக்கலாம்!

தன்னைப்போலவே தன் கட்சியையும் 'அண்டர் கிரவுண்டு'க்குள் புதைத்துவிட முயலும் ஒரு கொலைகார ஆயுள் கைதி கூட அந்த முக்காட்டு ஆசாமியாக இருக்கக்கூடும்!

பரிதாபத்திற்குரிய சில கனம்களாகவும் அந்த 'முக்காடு' இருக்கக்கூடும்!

சென்னை மாநகராட்சி தேர்தலில் இத்தனை பெரிய தோல்வியைச் சுமந்துகொண்ட இந்தப் பிண்டங்கள் ஆடிய ஆட்டமென்ன? பேசிய பேச்சு என்ன?

வெறி பிடித்துப் போய் கழகத் தலைவர்களையெல்லாம் அவன்கள் இவன்கள் என்று எத்தனை தரக் குறைவாகப் பேச முடியுமோ அத்தனையும் பேசினார் காமராசர்! பேச்சுக்கு உள்ள வரம்பை உதறித் தள்ளிவிட்டு தலைவரே பேசினார் என்றால் அவரது தொண்டரடிப் பொடியாழ்வார் கூட்டத்திற்கு சொல்லவா வேண்டும்? எடுபிடிகளோ எகிறி எகிறிக் குதித்தனர்!

ஆயுள் கைதியின் கொலைகாரக் கூட்டம் ஒருபுறம்; கிடைத்ததை அமுக்கிக்கொண்டு ஓடிய திருட்டுக் கும்பல் மறுபுறம்; எதிரே காமராசர் திருக்கூட்டம். அவரது ரதகஜதுரகபதாதிகள்! போதாக் குறைக்கு பெரியாரின் "பெரும் படை!"

இத்தனை எதிர்ப்புச் சக்திகளையும் மீறி மாநகராட்சித் தேர்தலில் கழகம் வெல்லுமா?—சில அரசியல்வாதிகள் மனதில் எழுந்த வினா!

இத்தனை எதிர்ப்புச் சக்திகளையும் முறியடித்து உதயசூரியன் ஒளிபரப்ப வேண்டும் — இது ஏழை எளிய மக்களின் இதயத் துடிப்பு!

கழகம் வெல்லும்! வெற்றி நமக்குத்தான்! — இப்படி கழகத் தொண்டன் ஒவ்வொருவனும் உறுதியோடு நம்பினான்!

காங்கிசின் உருட்டும் புரட்டும் மக்களது மதியை மயக்கிவிட முடியவில்லை. அப்படி நம்பியவர்கள் ஏமாந்தார்கள்!

நாம் உரத்த குரலில் ஒன்று சேர்ந்து ஓங்காரக் கூச்சலிட்டால் உண்மை அதில் அமுங்கிவிடும் என்று பொய்யுர், புனைச்சுருட்டையும் வாரி இறைத்தனர் பாவம்! பரிதாபத்துக்குரியவர்கள் தோல்வியைத் தழுவிக் கொண்டார்கள்!

லாரி ஊழல் பற்றி வாய் கிழியப் பேசினார்கள். அதுவோ அவர்களை வாரிக்கொண்டு போய் தோல்விப் படுகுழியில் புதைத்து விட்டுப் போய்விட்டது!

காமராசர் — தான் முன்னாள் 'கனம்' என்பதையும் மறந்தார். முடைநாற்றமெடுத்துப் போன தன் வாயால் கழகத் தலைவர்களை —மக்கள் திலகத்தை மாரியென வசை பாடினார். கண்டதென்ன? சென்னை மக்கள் அவருக்கும் புத்தி புகட்டிவிட்டனர்! சென்னை வாக்காளப் பெருமக்களை வாழ்த்துகின்றோம்!

ஆயிரம் முடவர்கள் ஒன்று சேர்ந்தாலும் ஒரு ஆறு வயதுச் சிறுவனின் ஓட்டத்தைப் பிடிக்க முடியாது!

கோடி கோட்டான்கள் குரலெடுத்துக் கத்தினாலும்; அது ஒரு குயிலின் குரலுக்கு ஒப்பாகாது!

அதைப் போலத்தான் மாநகராட்சித் தேர்தலில் கழகத்தை ஒழிப்போம் என்று அரசியல் அலிகள் சிலர் கூடி ஓலமிட்டனர். அந்த செல்லாக் காசுகளின் அரசியல் தமிழகத்தின் தலைநகரத்து மக்களிடம் விலை போகவில்லை!

கழகத்துக்கு எந்த அளவுக்கு மாசு கற்பிக்க முடியுமோ அந்த அளவுக்கு சேற்றை வாரி இறைத்தன சில அரை வேக்காடுகள்!

"வேட்டைக்காரன் வருவான்; புடவை கொடுக்கிறேன்; மழைக் கோட்டு கொடுக்கிறேன்; அரிசி, பருப்பு கொடுக்கிறேன் என்று சொல்லி ஓட்டுக் கேட்பான். ஏமாந்து விடாதீர்கள்!" என்று தன் 'முத்தான' வாய் திறந்து 'மணிவாசகம்' உதிர்த்திருக்கிறார் காமராசர் ஓரிடத்தில்!

மக்கள் திலகம் யார்? அவ்வரி நாடறியும். பாரிக்கு ஈடாய் மாரியைச் சொன்னாள் ஔவை. அந்தக் கொடை மன்னன பாரிதான் மக்கள் திலகமாகப் பிறந்து விட்டாரோ என்று ஏழைகள் போற்றும் அண்ணலை, நாத்துடுக்கோடு பேசினார் காமராசர். அதன் பலன் இன்று அவர் தோல்வியைச் சுவைத்துக் கொண்டிருக்கிறார்!

"பார்க்குமிடமெங்கும் பசியால் வருந்தும் ஏழைகளைக் காண்கின்றேன். பரட்டைத் தலையுடன் குழந்தைகளைப் பார்க்கிறேன். தி. மு. க.வுக்கு ஓட்டுப் போட்ட தன் பலனைப் பார்த்தீர்களா? இந்நிலை மாற காங்கிரசுக்கு ஓட்டளியுங்கள்" என்று பேசியிருக்கிறார் மற்றொரு இடத்தில்!

நடப்பது நகரசபைத் தேர்தல். அங்கு பேசவேண்டிய பேச்சா இது? நாடு சுதந்திரமடைந்து 17 ஆண்டுகளாக சாதிக்க முடியாததை இந்த நகரசபைத் தேர்தல் வெற்றி மூலம் சாதித்து விடுவாரா காமராசர்?

இன்று நகரமன்றத்தில் நாம் அடைந்துள்ள வெற்றி, அகில இந்தியாவின் மக்களது கவனத்தையும் கவர்ந்து நிற்கிறது! வெற்றி பெற்ற நண்பர்களை மகிழ்வுடன் வாழ்த்துகின்றோம்!

இன்று நமது இயக்கத்துக்கு ஏற்பட்டுள்ள இடர்பாடுகள் எத்தனையெத்தனை? அண்ணனும், அருமைத் தோழர்களும் வெஞ்சிறையில் வாடுகின்றனர். வெளியே உள்ள கலைஞர் மு. கருணாநிதி, அமைப்புச் செயலாளர் என். வி. என். போன்ற பலர் மீது சதி வழக்கு! சுற்றிலும் துரோகிகளின் வஞ்சக வலை! இத்தனையும் மீறி நாம் வென்றோம்! வெற்றிக்கு உழைத்த அத்தனை தோழர்களும் நமது வீர வணக்கத்துக்கு உரியவர்கள்!

"நீ ஒரு பொய்யை திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டே இரு; அது உண்மையாகிவிடும்" என்று எந்த ஒரு மேதாவியோ சொல்லிவிட்டுப் போனாலும் போனான்! அதை இந்த காமராசர் திருக்கூட்டம் பதவிப் பிடியாய்ப் பிடித்துக்கொண்டார்கள். வாயில் வந்ததையெல்லாம் ஓயாது புளுகினார்கள்.

கோப்பைக் கவிஞனுக்கும் அவன் குருநாதனுக்கும் இது கைவந்த கலை! அந்தக் கலையில் அவர்களையும் மிஞ்சிவிட முனைந்து நிற்கின்றனர் காமராசர் கூட்டத்தார்! ஆனால் அவர்களது புளுகு மொழிகளைக் கேட்க சென்னை மக்கள் தயாராக இல்லை!

ஆளும் தகுதி படைத்தவர்கள் நாங்கள்தான்; ஆளும் உரிமை எங்களுக்குத்தான் உண்டு என்று தலைகனத்துப் போய், ஆணவத்தோடு திமிர் பிடித்துப் பேசியவர்களை மூக்குடைத்து விட்டனர் சென்னை வாழ் மக்கள்!

கல்லடியும் சொல்லடியும் தாங்குவது கழகத்திற்குப் புதியதல்ல. சென்னை மாநகராட்சி மன்றத் தேர்தலில் நாம் அடைந்துள்ள வெற்றி நமக்கு புதிய எழுச்சியையும் மகிழ்ச்சியையும் ஊட்டுகிறது பிரசவ வேதனைப்படும் தாய், தான் பெற்றெடுத்த பேசும் பொற்சித்திரத்தின் பொக்கை வாய்ச் சிரிப்பில் தான் பட்ட துயர் அத்தனையும் மறந்து விடுவது போல, நாம் பட்ட வேதனைகளை மறப்போம்! சென்னை நகர மக்களின் நல்வாழ்வுக்கு உழைப்போம்!

## பம்பாய் தி. மு. க.

கடந்த 16—2—64 அன்று சொகேஸ்வரி பிரேம் நகரில் அண்ணா அறிவு வளர்ச்சி மன்ற திறப்பு விழா நடைபெற்றது. கழகப் பண் எல். எஸ். சண்முகம் இசைக்க, வந்திருந்த அனைவரையும் வரவேற்று மன்றத் தலைவர் எம். வி. சாமி பேசியபின் தோழர் த. மு. பொற்கோ அவர்களின் தலைமையில் கூட்டம துவங்கியது தலைவரின் தலைமையுரைக்குப் பின் அதிர்வேட்டுகள் முழங்க பெருத்த கையொலிகளுக்கிடையே கழகக் கொடியை தோழர் இரா. சண்முகராசன் ஏற்றுவித்து உரையாற்றினார்.

அறிஞர் அண்ணா அவர்களின் படத்தைத் திறந்து வைத்து தோழர் ஆரியசங்காரன் அவர்கள் அண்ணாவின் சீரியதொண்டு தமிழ்ப்பற்று, சொல் நயம் ஆகியவைகளை அழகுற எடுத்தியம்பினார்கள். மன்றச் செயலாளர் உ. அ. இரசாக், எம். ஜோசப், இராசி-பூபாலன், வீரை மு. சோமசுந்தரம், எஸ். தியாகராசன்(ப.ம. தி.மு.க.செ.) அவர்கள் நல்ல பல கருத்துக்களை இன்றைய அரசியல் நிலைமைகளை அழகாக எடுத்துக் கூறினார்கள். கூட்டத்தில் சென்னை மாநகராட்சி தேர்தல் நிதிக்காக உண்டியல் மூலம் தோழர் ஆரியசங்காரன் அவர்கள் ரூ. 23-16 காசுகள் வசூல் செய்து தந்தார்கள். மன்ற பொருளாளர் வி. நாராயணசாமி அவர்கள் ரூ. 51 தந்தார்கள்.

மற்றும் தலைவர் முடிவுரைக்குப் பின் மன்ற துணைச்செயலாளர் எம். கருப்பையா அவர்கள் நன்றி கூற கூட்டம் இனிது முடிந்தது

—"சிந்தா"

# கனம்களின் முகத்தில் கவலைக்குறி!

## சென்னையில் நடைபெற்ற வெற்றி விழாப் பொதுக்கூட்டத்தில் கலைஞர் கருணாநிதி முழக்கம்!

நாம், மாநகராட்சியில் நாலரை ஆண்டு காலம் செய்த தொண்டு தி. மு. கழகத்தின் 15 ஆண்டு கால சாதனை—அது செய்த தியாகம் — அத்தனையையும் ஆட்சி நடத்தும் காங்கிரசார் எவ்வளவு அவலத்துக்கு ஆட்படுத்தினர்கள் என்பதையும், அப்படிப்பட்ட காங்கிரசுக் கட்சிக்கு இரண்டு லட்சம் பேர் வாக்களித்திருக்கிறார்களே என்பதையும் எண்ணிப் பார்க்கும்போது வருந்தாமலிருக்க முடியவில்லை.

அடுத்த தேர்தலில் இந்த 2 இலட்சம் பேரும் தங்கள் தவறை உணர்ந்து, நமது அணிக்குத் தங்கள் வாக்குகளை அளித்து, தி. மு. கழகத்துக்கு ஒரு இடம் கூடத் தரமாட்டேன் என்று கூறிய காமராசருக்கு ஒரு இடம் கூடத் தரமாட்டோம்' என்று கூறுகிற நிலை உருவாக வேண்டும். மேலும் சென்னை மாநகர மக்களைத் திருப்பும் காரியத்தில் ஈடுபட்டாக வேண்டும்,

நாம் வெற்றியை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறோம் — அவர்கள் (மாற்றார்) வெறியை ஏற்படுத்திக கொண்டிருக்கின்றனர். வெற்றிக்கும்—வெறிக்கும் உள்ள வித்தியாசத்தை, அன்று கடற்கரையில் நடந்த மாற்றுக்கட்சிக் கூட்டத்திற்கும் இன்று நடக்கும் நமது கூட்டத்திற்கும் உள்ள வித்தியாசத்தைக் கொண்டே அறிந்து கொள்ளலாம்.

வெற்றி வாகை சூடியவர்களைப் போல்தான் வெற்றி வாய்ப்பு இழந்தவர்களும் இன்று உற்சாகமாகக் காணப்படுகிறார்கள். வெற்றி வாய்ப்பிழந்த அ. பொ. அரசு அவர்களின் முகம் அன்றலர்ந்த மலர் போன்றுதான் இருக்கிறது; கண்ணபிரான் முகத்தில் கவலை ரேகைகள் ஏதுமில்லை; வி. எஸ். கோவிந்தராசன் இன்னும் குதூகலமாகத்தான் இருக்கிறார்.

ஆனால் தோல்வியடைந்த மாற்றார் முகத்தைப் பார்த்தால் புரியும் அவர்களை நேரில் காணும்வாய்ப்பு எனக்கில்லை—ஆனால் சட்ட மன்றத்தில் அமைச்சர்களின் முகத்திலோடுகிற கவலைக் குறிகளைத் தினம் பார்க்கும் வாய்ப்பு எனக்கு இருக்கிறது.

இந்த வெற்றி விழாவில் எனக்கிருக்கிற வருத்தம், நாலரை ஆண்டுகள் கழகம் மாநகராட்சியில் நல்லாட்சி நடத்திய பிறகும் 16 ஆண்டுகள் காங்கிரசு ஆட்சியின் கொடுமைகளை எடுத்துரைத்த பிறகும் — காங்கிரசுக் கட்சி இந்த மாநகராட்சித் தேர்தலில் இரண்டு லட்சம் வாக்குகளை வாங்கிவிட்டதே என்பதுதான்!

வெற்றிக் களிப்பிலேயுள்ள நண்பர்களும், வெற்றி வாய்ப்பிழந்த தோழர்களும், அந்த இரண்டு லட்சம் வாக்குகளையும் அடுத்த தடவை நமக்கே விழும்படி இன்றிலிருந்தே பணியாற்றத் தொடங்க வேண்டும். அப்போதுதான் வெற்றிக் களிப்பில் நாம் தோய்ந்திருக்கவில்லை;— ஓய்ந்திருக்கவும் இல்லை என்பது உலகிற்குத் தெரியும்.

சென்னையில் தேர்தல் பிரச்சாரம் துவங்கிய நேரத்தில் அமைச்சர் பக்தவத்சலம் அவர்கள், "போனால் போகிறது என்றுதான் நாங்கள் மாநகராட்சி மேயர் பதவியை நாலரை ஆண்டு காலம் தி. மு. கழகத்திற்குத் தந்தோம்; இனி தர மாட்டோம்" என்று கூறினர்.

அடுத்த கூட்டத்தில் அதற்கு நான் பதில் தருகையில், நாங்களும்தான் போனால் போகிறது என்று இரண்டரை மாத காலம் உங்களுக்கு மேயர் பதவியைத் தந்திருக்கிறோம்; இந்தத் தேர்தல் முடிந்ததும் திரும்பப் பெற்றுக் கொள்வோம்" என்று கூறினேன்; கூறியபடியே இப்போது மேயர் பதவியைப் பிடித்துவிட்டோம்.

சென்னை வாக்காளர் பெருமக்களாகிய உங்களை நம்பித்தான் நான் அமைச்சருக்கு அவ்விதம் பதிலளித்தேன்; 'தி. மு. கழகம் உங்கள் சொந்தக் கட்சி—உங்கள் குடும்பக் கழகம்' என்பதால் தான் அந்த அறைகூவலை நான் விடுக்க முடிந்தது.

நீங்கள் ஈட்டித் தந்துள்ள இந்த மகத்தான வெற்றி—சிங்காரச் சென்னையில் செந்தமிழ் காக்க—நம்மை இரண்டாந்தரக் குடிமக்களாக்கும் இந்தியை எதிர்க்க அரசியல் சட்டப்பிரிவை எரிக்க முனைந்து அரசினரால் கைது செய்யப்பட்டு இன்று சிறைக் கோட்டத்தில் இருந்து வரும் நமது தலைவர் அறிஞர் அண்ணா அவர்கள் மகிழும் அளவுக்குப் பெரிய வெற்றியாகும்.

சென்னையல்லாது மற்ற வெளியூர்களிலே உள்ள வாக்காளர்களை நான் கேட்டுக் கொள்கிறேன்—காங்கிரசு தந்த பணத்திற்கு ஆசைப்படாது ஆசை வார்த்தைக்கு மயங்காது, தமிழகத்தின் தலைநகராம் சென்னை வழங்கிய தீர்ப்பைப் போலவே நீங்களும் உங்கள் தீர்ப்பை அடுத்து வரும் தேர்தல்களில் வழங்க வேண்டும்"

○

# தலைநகரில் வெற்றி விழா!

## வெற்றி பெற்ற மாநகராட்சிமன்ற உறுப்பினர்களுக்கு பாராட்டு!

மாநகராட்சிமன்றத் தேர்தலில் வெற்றி பெற்ற தி. மு. க.—லீக்—சுயேச்சை உறுப்பினர்களைப் பாராட்டும் பொருட்டும், வாக்காளர் பெருமக்களுக்கு நன்றி தெரிவிக்கும் வகையிலும், சென்னை மாவட்ட தி. மு. க. சார்பில் 1-3-64 அன்று மாலை, திருவல்லிக்கேணிக் கடற்கரையில் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

வெற்றி பெற்ற கழக—லீக்—வேட்பாளர்களும், கழக ஆதரவு பெற்ற சுயேச்சை வேட்பாளர்களும் மேடையில் அறிமுகப்படுத்தப்பட்டனர்.

அண்மையில் இதுபோன்றதொரு பொதுக்கூட்டம் கடற்கரையில் நடந்ததில்லை என்று சொல்லக்கூடிய அளவுக்கு ஏராளமான தாய்மார்கள் உட்பட பல்லாயிரக்கணக்கில் மக்கள் திரண்டிருந்தனர்.

மாவட்டச் செயலாளர் நீல நாராயணன் தலைமையில் நடந்த இந்தக் கூட்டத்தில், கழக அவைத் தலைவர் இரா. நெடுஞ்செழியன், பொருளாளர் மு.கருணாநிதி, அமைப்புச்செயலாளர் என். வி. நடராசன், வெளியீட்டுச் செயலாளர் சி. பி. சிற்றரசு, கொள்கை பரப்புச் செயலாளர் சத்தியவாணிமுத்து, தோழர் அ. பொ. அரசு, முஸ்லிம் லீக்தோழர் ஆ. க. அ. அப்துஸ் சமத், சுதந்தராக் கட்சித் தோழர் எஸ். எஸ். மாரிசாமி ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினர்.

திருச்சி இராமசாமி குழுவினரின் இசை நிகழ்ச்சிக்குப் பின் கூட்டம் துவங்கியது.

மாவட்டக் கழகத் துணைச் செயலாளர் சு. பாலன் அனைவரையும் வரவேற்றார்.

மாவட்டச் செயலாளர் நீல நாராயணன், தமது தலைமையுரையில், நாம் பெற்ற வெற்றியின் சிறப்பையும், இந்த வெற்றிக்குப் பட்டபாட்டினையும் எடுத்துரைத்து, வாக்காளர் பெருமக்களுக்கும் ஒத்துழைத்த அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொண்டார்.

வெற்றிபெற்ற ஒவ்வொரு தோழருக்கும், பெரம்பூர் இரயில்வே தொழிலாளர்கள் சார்பில் பாராட்டிதழ் வாசித்தளிக்கப்பட்டது.

சேலம் தோழர் பத்மநாபன் சார்பில் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்களுக்கு சரிகை மாலை அணிவிக்கப்பட்டது.

தலைமைக் கழகச் சார்பில், 'திருக்குறள் தெளிவுரை' என்ற நூல் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்களால் வழங்கப்பட்டது. கைத்தறி ஆடைகளும் அணிவிக்கப்பட்டன.

ஒவ்வொருவராக மேடைக்கு வந்து வணக்கம் தெரிவித்துப் பாராட்டைப் பெற்றுக்கொண்டபோது, கூடியிருந்த மக்கள் கையொலி எழுப்பித் தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டனர்.

மூன்று கட்சிகளும் சேர்ந்து பெற்ற இந்த வெற்றியைக் குறிக்கும் வகையில், மூன்று கட்சிகளின் தலைவர்கட்கும், 'பிளாஸ்டிக்'கினால் ஆன முக்கனிகளை வழங்கினர். அன்பில் அபூபக்கர் என்னும் கழகத் தோழர்.

இரவு 10 மணிக்கு விழா இனிது முடிந்தது. கடற்கரையிலிருந்து கூட்டம் கலைந்து செல்ல சுமார் அரைமணி நேரம் பிடித்தது.

மற்றக் கட்சிக் கூட்டங்கள்—வேறு பல நிகழ்ச்சிகளுக்கெல்லாம் தனி பஸ் வசதி ஏற்படுத்தித் தரும் அரசாங்கப் போக்குவரத்துத் துறையினர், நேற்றைய கூட்டத்திற்கு எவ்வித ஏற்பாடும் செய்யவில்லை. பஸ் இல்லாத காரணத்தால் கூட்டம் கூட்டமாக நடந்தே அவரவர் வீடுகளுக்குச் சென்றனர். தாய்மார்கள் குழந்தைகளைத் தூக்கிக் கொண்டே மைல் கணக்கில் நடந்து சென்றனர். பெற்றோர்களுடன் வந்திருந்த சிறுவர்-சிறுமியரும் கால்கடுக்க நடந்துசென்ற காட்சி பரிதாபமாக இருந்தது.

⁂